Registered as a News Paper in Sri Lanka

பக்கங்கள் 04

விலை [illegible]: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 | பிரமோதூத ஸூ ஆனி மீ 29 ஆம் உ | வெள்ளிக்கிழமை | (13 - 07 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஜுல்ஹஂ 19 | ஓசை 145

## தமிழ் மக்கள் படுகொலையை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது

(கொழும்பு)

சிறிலங்கா அரச படைகளின் தாக்குதலால் தமிழ்ப் பொதுமக்கள் பெருமளவில் கொல்லப்படுகிறார்கள் என்பதைசிறிலங்கா பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்று ஒப்புக்கொண்டார்.

கல்முனையில் அரச படைகளும் ஜிகாத்தும் முப்பத்திமூன்று தமிழர்களைப் படுகொலை செய்து வீ தி யி ல் போட்டிருந்தனர். இச் சடலங்களை சிறிலங்கா அரசு அந்தஇடங்களிலிருந்து அப்புறப்படுத்தி தகனம் செய்து விட்டதாகவும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கடனாகவே பவுண் கேட்கிறோம்; மறைக்க முயற்சிப்பது மனச்சாட்சிக்கே துரோகம் செய்வதாகும் - மண்மீட்பு நிதி கோரி மாத்தயா



(நீர்வேலி)

''நீங்கள் சேமித்து வைத்துள்ள சடப்பொருட்களையே நாம் கடனாகக்கேட்கிறோம் அதேநேரத்தில் அவற்றை மறைக்க நீங்கள் முற்படுகின்றீர்கள். அப்படி நினைப்பது, முற்படுவது இந்த நாட்டிற்குத் துரோகம் செய்வதாகும். இன்னும்விபரித்தால் எமது மனச்சாட்சிக்கே நாம் துரோகம் செய்வதாக அமைகின்றது, ஏமாற்றுவதாக அமைகின்றது'' என ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற மண் மீட்புநிதிக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய மகேந்திரராசா, ''எனவே இப்படித் துரோகம் செய்யாது எல்லோரும் பங்கு தாரராகச் சேர வேண்டுமென்றே கேட்டுக் கொள்கிறோம். உங்களிடம் கடனாகவே பவுணைக் கேட்கின்றோம். நாங்கள் திருப்பித் தந்தே தீருவோம்'' என்றார்.

மேலும் அவர் தனது உரையில் இன்றைய காலகட்டத்தில், இந்தப் போராட்ட நேரத்தில் மக்கள் எல்லோரும் பங்களிப்புச் செய்யவேண்டும்; போராளிகளாக மாறவேண்டும் என்றும் தெரிவித்தார்.

சிற்றூரவைத் தலைவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

# கொக்காவில் சிறிலங்கா ராணுவ முகாம் விடுதலைப்புலிகளால் அழிக்கப்பட்டது!

## சிப்பாய்கள் அனைவரும் மாண்டனர்; முகாம் கட்டடத்தின் இடிபாட்டிற்குள் மீட்கப்படாத இராணுவத்தினரின் சடலங்கள்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசபடைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்றுவரும் போரில் நேற்று முன்தினமிரவு விடுதலைப்புலிகள் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கொக்காவில் இராணுவ முகாமை முற்றாக அழித்துவிட்டனர்.

இத்தாக்குதலில் ஆறு பெண் புலிகள் உட்பட பதினெட்டு விடுதலைப்புலிகள் வீரமரணமடைந்தனர்.

சிறிலங்கா அரசு கடந்தசில வாரங்களாகத் தமது படைகள் வடக்கிலும் கிழக்கிலும் பல முனைகளிலும் முன்னேறிச் சென்று கொண்டிருப்பதாகவும் கிழக்கில் பலஇடங்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டதாகவும் பிரசாரம் செய்துவந்தது.

கடந்த இரண்டுதினங்களாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ளகொக்காவிலில் சிறிலங்கா இராணுவமுகாம் இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் கடும்மோதல் ஏற்பட்டது.

இந்த மோதல் நேற்று முன்தினமிரவு விடுதலைப்புலிகளின் கடுந்தாக்குதலுக்கு சிறிலங்கா இராணுவம் நின்று பிடிக்காமல் சரிந்தது. இந்த முகாமிலிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் அனைவரும் கொல்லப்பட்டனர். இவர்களில் நாற்பத்தாறு சிப்பாய்களின் சடலங்களை மீட்டெடுத்த விடுதலைப்புலிகள் அவற்றைத் தகனம் செய்தனர். கட்டடத்தின் இடிபாடுகளில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்

(கொக்காவில்)

கொக்காவில் இராணுவ

எல்.எம்.ஜி.-4, ஆர்.பீ.ஜீ-3, மோட்டார்-4, ஏ.கே ரைபிள்

## வீரமணி தலைமையில் 500 பேர் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

இலங்கையில் அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்படுவது குறித்தும், அவர்களது உடைமைகள் அழிக்கப்படுவது குறித்தும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் திராவிடர் கழகம் மாபெரும் கண்டன ஊர்வலம் ஒன்றை நேற்று சென்னையில் நடத்தியது.

இந்தக் கண்டன ஊர்வலம் மேற்படி கழகத்தின் பொதுச் செயலாளர் திரு. க. வீரமணி தலைமையில் நடைபெற்றது. ஐநூறுக்கு மேற்பட்டோர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

யாவுக்கான இலங்கையின் தூதுவராலயத்தில் கண்டன மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## கரும் புலிகளுக்கு யாழ். குடாநாடு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கடற்படை கப்பல் மீதான தாக்குதலில் வீரமரணமடைந்த கடற், கரும் புலிகளான மேஜர் காந்தரூபன், கப்டன் விநோத், கப்டன் கொலின்ஸ் ஆகியோருக்

# சிப்பாய்கள் அனைவரும் மாண்டனர்; முகாம் கட்டடத்தின் இடிபாட்டிற்குள் மீட்கப்படாத இராணுவத்தினரின் சடலங்கள்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசபடைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்றுவரும் போரில் நேற்று முன்தினமிரவு விடுதலைப்புலிகள் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கொக்காவில் இராணுவ முகாமை முற்றாக அழித்துவிட்டனர்.

இத்தாக்குதலில் ஆறு பெண் புலிகள் உட்பட பதினெட்டு விடுதலைப்புலிகள் வீரமரணமடைந்தனர்.

சிறிலங்கா அரசு கடந்தசில வாரங்களாகத் தமது படைகள் வடக்கிலும் கிழக்கிலும் பல முனைகளிலும் முன்னேறிச் சென்று கொண்டிருப்பதாகவும் கிழக்கில் பலஇடங்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டதாகவும் பிரசாரம் செய்துவந்தது.

கடந்த இரண்டுதினங்களாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ளகொக்காவிலில் சிறிலங்கா இராணுவமுகாம் இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் கடும்மோதல் ஏற்பட்டது.

இந்த மோதல் நேற்று முன்தினமிரவு விடுதலைப்புலிகளின் கடுந்தாக்குதலுக்கு சிறிலங்கா இராணுவம் நின்று பிடிக்காமல் சரிந்தது. இந்த முகாமிலிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் அனைவரும் கொல்லப்பட்டனர். இவர்களில் நாற்பத்தாறு சிப்பாய்களின் சடலங்களை மீட்டெடுத்த விடுதலைப்புலிகள் அவற்றைத் தகனம் செய்தனர். கட்டடத்தின் இடிபாடுகளில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்

(கொக்காவில்)

கொக்காவில் இராணுவ முகாம் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளினால்இராணுவ முகாமிலிருந்து ஏ.கே. எல்.எம்.ஜி.-4, ஆர்.பீ.ஜீ-3, மோட்டார்-4, ஏ.கே ரைபிள் 50 ஆகிய ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

## வீரமணி தலைமையில் 500 பேர் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

இலங்கையில் அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்படுவது குறித்தும், அவர்களது உடைமைகள் அழிக்கப்படுவது குறித்தும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் திராவிடர் கழகம் மாபெரும் கண்டன ஊர்வலம் ஒன்றை நேற்று சென்னையில் நடத்தியது.

இந்தக் கண்டன ஊர்வலம் மேற்படி கழகத்தின் பொதுச் செயலாளர் திரு. க. வீரமணி தலைமையில் நடைபெற்றது. ஐ நூறுக்கு மேற்பட்டோர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

படுகொலைக்கு எதிரான கோஷங்கள் ஊர்வலத்தில் தெரிவிக்கப்பட்டதுடன் இந்தியாவுக்கான இலங்கையின் தூதுவராலயத்தில் கண்டன மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## கரும் புலிகளுக்கு யாழ். குடாநாடு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கடற்படை கப்பல் மீதான தாக்குதலில் வீரமரணமடைந்த கடற், கரும்புலிகளான மேஜர் காந்தரூபன், கப்டன் விநோத், கப்டன் கொலின்ஸ் ஆகியோருக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில் யாழ். குடாநாடு எங்கும் ஒலிபெருக்கி மூலம் சோககீதம் இசைத்தவண்ணம் உள்ளது.

சந்திகளெங்கும் இந்த வீரர்களின் புகைப்படங்கள் வைக்கப்பட்டுள்ளதுடன் தோரணங்களும் அமைக்கப்பட்டு வீர வணக்கம் செலுத்தப்பட்டு வருகின்றது.

## தமிழர் மீது சிங்கள அரசு புதிய பாணி ஆக்கிரமிப்பு!

### தி. மு. கழகம் கண்டனம்

(சென்னை)

''சிறிலங்கா அரசு, தமிழ் மக்கள் அகதிகளாகி வெளியேறும் ஒரு சூழ்நிலையை உருவாக்கும் செயலானது, அது தமிழ் மக்கள் மீது மேற்கொண்டுள்ள புதிய பாணியிலான ஆக்கிரமிப்பு நடவடிக்கையே ஆகும்'' என்று தமிழக ஆளும் தி. மு. கழகம் நேற்றுக் குற்றம் சாட்டியுள்ளது.

தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி தலைமையில் நேற்று சென்னையில் நடைபெற்ற மேற்படி கட்சியின் நிர்வாக குழுக் கூட்டத்திலேயே சிறிலங்கா அரசின் இந்தப் புதிய பாணியிலான ஆக்கிர

(4ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே....

இலவசவெள்ளிமஞ்சரி இணைக்கப்பட்டுள்ளது.

## போர்க்கப்பல் சேதம்

(கொழும்பு)

வடமராட்சிப்பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் கடலில் வைத்து நடத்திய தாக்குதலினால் கடற்படைக்கு சொந்தமான யுத்தக்கப்பலொன்று பலத்த சேதமுற்று விட்டதாக இலங்கை அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## தள்ளாடியில் மோதல் நான்கு புலிகள் வீரமரணம்

(மன்னார்)

தள்ளாடி இராணுவமுகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர்மீது தள்ளாடிக்கும் திருநாவல் குளத்திற்குமிடையே வைத்து விடுதலைப்புலிகள் நேற்றுக் காலை ஒன்பது முப்பதிற்கு பெருந்தாக்குதல் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலால் அதிக எண்ணிக்கையானஇராணுவத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முகாம் மூடப்பட்டது

(மூதூர்)

நேற்று கட்டப்பறிச்சான் இராணுவமுகாம் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. கட்டப்பறிச்சானில் முகாமிட்டிருந்த சிங்கள இராணுவத்தினர் நேற்று அம்முகாமைக் கலைத்துக் கொண்டு அங்கிருந்து மூதூருக்குச் சென்றுள்ளனர்.

## இராணுவம் மீது தாக்குதல்

(ஆனையிறவு)

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து நூறுயார் தூரத்தில் காவலரண் அமைக்க வந்த இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலால் இராணுவத்தினர் பின்வாங்கி முகாம் திரும்பினர். சேதவிபரங்கள் தெரியவில்லை (மு)

## கொக்காவில் தாக்குதலில் 18 போராளிகள் வீர மரணம்

(கொக்காவில்)

கொக்காவில் இராணுவ முகாம் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் 18 போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களில் 6 பெண் போராளிகளும் 12 ஆண்போராளிகளும் அடங்குவர்.

மகளிர் படைப் பிரிவைச் சேர்ந்த கப்டன் உசா (முள்ளியவளை), மாலா (வல்வெட்டித்துறை), சாளினி (வல்வெட்டித்துறை) பிரியங்கா (வல்வெட்டித்துறை), அஜந்தா (கல்வியங்காடு), குமாரி (திருக்கோணமலை) ஆகிய பெண்போராளிகளும், ஆண்போராளிகளில் கப்டன் பாபு (மன்னார்), கப்டன்-சிவகுமார் (திருக்கோணமலை) லெப்டினன்- நியூட்டன் (கிளிநொச்சி); லெப்டினன்- மாவி (துணுக்காய்), இரண்டாம் லெப்டினன்-கமீத் (துணுக்காய்), இரண்டாம் லெப்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கு உணவு, மருந்து அனுப்பாதது சிறிலங்காவின் நொண்டிச்சாட்டென பல்கலை. மாணவர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''சிறிலங்கா அரசின் கண்மூடித்தனமான தாக்குதல்களினால் பல நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். பல நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கானோர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான உணவு, உடை, மருத்துவ வசதிகள் போன்றவற்றை அரசாங்கம் நொண்டிச் சாட்டுக்களைக் கூறிக் கொண்டு வழங்காமல் உள்ளது'' என யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்புக் கண்டனம் தெரிவித்துள்ளது.

மேற்படி அமைப்பு விடுத்துள்ள அந்த அறிக்கையில் மேலும்

''கடந்த 11.6.90 தொடக்கம் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்று வரும் இராணுவநடவடிக்கையானது தமிழ்ப் பேசும் மக்கள் மத்தியில் பெரும் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது. தற்போது நடக்கும் யுத்தமானது தமிழ்ப் பேசும் மக்களுக்கு எதிரானது அல்ல என்று கூறிக்கொண்டு சிங்கள அரசானது திட்டமிட்ட முறையில் இன ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதை யாவரும் அறிவர். கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களும், தொடர்ச்சியான விமானக் குண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தில் இதுவரை 342 பேர் மரணம், 412 பேர் காயம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதலினால் இதுவரை 342 படையினர் கொல்லப்பட்டுள்ளதாக இலங்கை அரச தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 412 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இராணுவத்தால் 9 பேர் கைது

(வவுனியா)

நேற்று பகல்12மணியளவில் பராக்கிரம புரத்தில் உள்ள இராணுவ முகாமிலிருந்து வெடிவைத்தகல் (வவுனியா)விற்கு வந்த இராணுவத்தினர் 9 பொதுமக்களைக் கைது செய்துள்ளனர்.

இவர்களில் 6 பேர் பின்னர் விடுதலை செய்யப் பட்டுள்ளனர். கந்தையா - சிவதாஸ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 20ஆம் தேதி தமிழகமெங்கும் கடையடைப்பு ஹர்த்தால்

(சென்னை)

தமிழ் நாட்டில் எதிர்வரும் இருபதாம் திகதி மாநிலம் தழுவிய கடையடைப்பும், பொது வேலை நிறுத்தமும் உள்ளடக்கிய மாபெரும் ஹர்த்தால் ஒன்று மேற்கொள்ளப்பட உள்ளதாக தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் இராணுவத்தினரால் கொல்லப்படுவதையும். ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக்கப் படுவதையும் கண்டு வேதனை அடைந்துள்ள தமிழக மக்களின் மனக்குமுறலை உலகுக்கு வெளிப்படுத்தும் வகையிலேயே கடையடைப்பும் பொது வேலை நிறுத்தமும் உள்ளடக்கிய இந்தஹர்த்தால் மேற்கொள்ளப்பட உள்ளதாக கலைஞர் கருணாநிதி தெரிவித்தார்.

எதிர்வரும் இருபதாம் திகதி காலை ஆறு மணிக்கு ஆரம்பிக்கப்படும் இந்த கடைய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மாணவருக்கு மாற்று ஒழுங்குகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 80 பள்ளிக்கூடங்களில் 72 பள்ளிக்கூடங்கள் வழமை போல் இயங்குகின்றன. நகர்ப்புறத்தில் உள்ள கிளிநொச்சி ம.வி, கனிஷ்டவித்தியாலயம், புனித திரேசா மகளிர் வித்தியாலயம், கனகபுரம் அ. த. க. பாடசாலை ஆகியவை மாணவர் இடம்பெயர்ந்துள்ளதால் இயங்காது உள்ளன. இயக்கச்சி, ஆனையிறவு ஆகியன

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வெரித்தாஸ் வானொலி வெளியிடும் திகில் செய்திகள்

(மணிலா)

தென்பகுதியில் ஜே, வி. பி. இயக்கத்தினரை படுகொலை செய்த மத்திய மலைக் கழுகுகள், கறுப்பு பூனை என்ற அரசின் கொலைப்படைகள் கிழக்கிலும் தற்போது படுகொலைகள் செய்வதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

சயனைட் பூசப்பட்ட கத்தியால் இவர்கள் இக் கொலைகளைச் செய்வதாகவும் அறிவிக்கப்பட்டது.

கல்முனையில் பதினைந்து தமிழ் இளைஞர்களின் சடலங்களை கறுப்பு உடை அணிந்து வந்த இராணுவத்தினர் வீதிகளில் போட்டு விட்டு சென்றதை பொதுமக்கள் கண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அடையாளம் காணாதவாறு சடலங்கள் எரித்துப் போடப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு நகரில் ஐந்து தமிழ் இளைஞர்களின் சடலங்கள் வீதியில் காணப்பட்டன. அவற்றில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை வசைபாடும் வாசகங்கள் காணப்பட்டன.

தென் பகுதியிலும் இதே போன்று சடலங்களில் ஜே. வி. பி. தலைவர் றோகண விஜேவீராவை வசை பாடும் வாசகங்கள் காணப்பட்டிருந்தன.

விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிப்போரை கொலை செய்து வீதிகளிலும், சிலரை மூடைகளிலும் கட்டி கிணறுகளில் போடுகின்றனர். இவ்வாறு வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

## நல்லூர் உற்சவம்

(ஈச்சமோட்டை)

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் இம் மாதம் 27 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தற்போதைய நாட்டு நிலைமை காரணமாக சுவாமியின் உள்வீதி உலாமட்டும் இடம் பெறும். நிலைமை சீரடைந்தால் வெளிவீதி உலா இடம் பெறலாம் என்று மேற்படி கோயில் ஆலய நிர்வாகி தெரிவித்தார். (43)

# கமநலசேவை நிலையங்கள் உப-உணவுகள் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள கமநல சேவை நிலையங்கள் யாவற்றிலும் பயறு, கௌபி, குரக்கன், தினை, மற்றும் மரக்கறி விதைகள் கொள்வனவு செய்யப்படுகின்றன.

ஆகவே தரமான விதைகளை வைத்திருக்கும் விவசாயிகள் தங்கள் பகுதி பொறுப்பான உத்தியோகத்தருடனோ அல்லது விவசாயப் போதனாசிரியருடனோ அல்லது தங்கள் பகுதி கமநலச்சேவை நிலையத்துடனோ தொடர்புகொள்ளும்படி தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுள்ளது. (ம)

# கொழும்பிலிருந்து லொறிகளில் மேலும் 1500 அகதிகள்

(நல்லூர்)

மீண்டும் கொழும்பிலிருந்து அகதிகளாக ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட மக்கள் லொறிகளில் கடந்த புதன் மாலை வந்திறங்கினார்கள்.

இவர்களை முன்பு போல மதவாச்சி வரைக்கும் வவுனியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் பாதுகாப்பிற்காக கொண்டு வந்து வழியனுப்பி வைத்தார்.

நேற்று வந்திறங்கிய அகதிகளில் ஒருவர் தாம் வரும் பொழுது அனுராதபுரத்தில் கல்லெறிக்கு உள்ளானதாகவும் சிலருக்குத் தலையில் காயம் ஏற்பட்டதாகவும் கூறினார். மேலும் காடுகளுடாகவும் யாழப்பாணத்திற்கு வந்ததாகவும் அவர் தெரிவித்தார். (லோ)

## தொழிலாளர் சங்க கூட்டம்

திருக்கோணமலை துறைமுக அதிகார சபையில்வேலை செய்யும் இடம் பெயர்ந்த தொழிலாளர்களது தொழில் சம்பந்தமாகவும் வேதனம் சம்பந்தமாகவும் கலந்துரையாடி உரிய நடவடிக்கை மேற் கொள்வதற்காக 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயில் முன்றலில் (சாவகச்சேரி புகையிரத நிலையத்துக்கு அருகாமையில்) ஓர் கூட்டத்தை வடக்கு கிழக்குத் தொழிலாளர் சங்கம் (து.அ.சபை தி. மலை) நடாத்தவுள்ளது. சகல தொழிலாளர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளார்கள்.

## இந்து மன்றம் வேண்டுகோள்

# சகல மத ஸ்தாபனங்களும் அகதிகளுக்கு உதவ வேண்டும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தை நோக்கி அகதிகளாக வந்து கொண்டிருக்கும் பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு சமய ஸ்தாபனங்கள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து உதவ முன்வர வேண்டும் என்று கிளிநொச்சி இந்து இளைஞர் மன்றம் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்தஅறிக்கையில்திருக்கோணமலை, மட்டக்களப்பு, வவுனியா,மன்னார் மாவட்டங்களிலிருந்தும்.யாழ். மாவட்டத்திலிருந்தும்தினமும் அகதிகள் வந்து கொண்டிருக்கின்றார்கள்.இவர்களில் பலர் உடுத்த உடுப்போடு வந்துள்ளனர்.

அவ்வாறு வந்துள்ள எமது சகோதரர்களுக்கு ஆகக்குறைந்தது உண்ண உணவும்,உடுக்க உடையும், நோய்க்கு மருந்தும் வழங்க வேண்டியது எமது கடமையாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (49)


## இடம்மாற்றம்

சன்லைற் றைக்கிளீனர்ஸ்
23, பஸ் நிலையம் முன்பாக,
யாழ்ப்பாணம்.

தமது வாடிக்கையாளர்களை
கிளை நிறுவனமான
சன்லைற் றைக்கிளீனர்ஸ்
46, கண்டிவீதி, (கச்சேரி அருகாமையில்)
யாழ். செஞ்சிலுவைச் சங்கம் முன்பாக
தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

(B/ 1249)


## தமிழக முதல்வர்

# முரண்பாடாகச் செயற்படுவதாக நெடுமாறன் குற்றச்சாட்டு

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குஎதிராக அவர்களின் மனித உரிமைகள் பறிக்கப்படுவதாக தமிழக முதல்வர் முன்னர் கூறினார்.

ஆனால் இன்று அவர் முரண்பட்டு செயற்படுகிறார் என்று காமராஜ் காங்கிரஸ் தலைவர் ப. நெடுமாறன் குற்றம் சாட்டினார்.

தமிழகத்தில் 1988இல் ஜனாதிபதி ஆட்சி நடைபெற்றபோது விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டு உட்பட பலர் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டதை கண்டித்த கருணாநிதி தற்போது முதலமைச்சரான பின்பு அதே சட்டத்தை புலிகளுக்கு எதிராக பயன்படுத்துகிறார். இவ்வாறு நெடுமாறன் கூறினார்.

# வாகரையில் விமானத் தாக்கு; 6 பேர் பலி; கட்டிடங்கள் சேதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரை எனும் இடத்தில் நடைபெற்ற விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டனர். கட்டிடங்கள் பல பலத்தசேதத்திற்குள்ளாகின.

நேற்று முன்தினம் பகல் ஒரு மணியளவில் நடைபெற்ற இத் தாக்குதலில் 5 குண்டுவீச்சு விமானங்கள் ஈடுபட்டிருந்தன.

இத்தாக்குதலினால் 2பெண்கள், 2ஆண்கள், 2குழந்தைகள் உட்பட ஆறுபேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

மேலும் அப்பகுதியிலுள்ள அரச மருத்துவமனையும் கோயில் என்பனவும் பலத்த சேதத்திற்குள்ளாகின. (ம)

## பாதுகாப்பாக மகள் இருக்கிறார்

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலை பிறீமா ஆலையைச் சேர்ந்த எஸ் பத்மநாதன் என்பவரின் மகள் பத்மவதனி பாதுகாப்பானஇடத்தில் நலமாக இருப்பதாகவும், அவர்குறித்து கவலைகொள்ள வேண்டாம் எனவும் திருக்கோணமலையில் இருந்து வந்த அவர்களது உறவினர்கள் ஈழநாதத்திற்கு தெரிவித்தார்கள்.

''மகளைத் தேடும் தந்தை'' என்ற தலைப்பில் கடந்தவாரம் ஈழநாதத்தில் வந்த செய்தியையடுத்தே இத்தகவல் தெரிவிக்கப்பட்டது. (மு)

## ஆலோசனைக் கூட்டம்

சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த லியோ கழக உறுப்பினர்களுக்கு, அகதிகளுக்கான நிவாரண வேலைகள் செய்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை (14-07-90) காலை 9-30 மணியளவில், சித்தன்கேணியில் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக தொழிற்பயிற்சிப் பாடசாலைக் கட்டிடத்தில் நடைபெறும் என்றும் அதற்கு இவர்களை தவறாது சமுகம் கொடுக்குமாறு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக தலைவர் கேட்டுக்கொள்கின்றார்.

## வடக்கு, கிழக்கு மாகாணசபைதேர்தல்

# நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாண சபை தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமை முதல் ஏற்றுக் கொள்ளப்படும் என தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள எட்டு மாவட்டங்களின் கச்சேரிகளில் இவை ஏற்றுக்கொள்ளப்படும்.

அடுத்த மாதம் 1ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக இவை செலுத்தப்பட வேண்டும்,

எதிர்வரும் 31ஆம் திகதி வரை சுயேட்சைக்குழுக்களிடமிருந்து வைப்புத்தொகை ஏற்றுக்கொள்ளப்படும்.

# இந்து ஆலயத்தின் மீதான தாக்குதலுக்கு கண்டனம்

(கொழும்புத்துறை)

''வடக்குக் கிழக்கு மாகாணத்தில் பரவலாக இந்துசமயத்தவர்களின் வழிபாட்டுத் தலங்களை ஸ்ரீலங்கா அரசாங்கம் திட்டமிட்டுத் தாக்கிச் சேதப்படுத்தி, அழிக்க முனைகின்றது. இச் செயலை வன்மையாக கண்டிக்கிறோம்'' என்று யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை கண்டனம் தெரிவித்துள்ளது.

''கிழக்கு மாகாணத்தில அம்பாறை மாவட்டத்தில் உள்ள பிள்ளையார் ஆலயம் வெகுவாகத் தாக்கப்பட்டுள்ளது. நல்லூர் ஸ்ரீ முருகன் ஆலயச் சூழலிலும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

''தமிழ் மக்களது பாரம்பரிய பூமியில் இச் சமயம் அழிப்பு நடவடிக்கைகளைத் தடுக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்'' என்று பேரவை

# இராணுவ நடவடிக்கைக்கு சுதந்திரக்கட்சி முழு ஆதரவு

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் இடம் பெறும் யுத்தத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளை முழுமையாக ஆதரிப்பதாக சுதந்திரக்கட்சி எம்.பி. யான அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு பிரச்சினைத் தீர்வுக்கு யுத்தத்தை தவிர வேறுவழி இப்போது தோன்றவில்லை என்று சுதந்திரக் கட்சி எம். பி. லக்ஸ்மன் ஜெயக்கொடி கூறியுள்ளார்.

## யாழ். பல்கலைக்கழக


## றேடியோஸ்பதி

### வாடிக்கையாளர்கள்கவனத்திற்கு

ஒலிப்பதிவு திருத்த வேலைகளுக்காக எம்மிடம் பொருட்களை ஒப்படைத்த வாடிக்கையாளர்கள் கீழ்க்கண்ட முகவரியில் உடன் தொடர்பு கொள்ளவும்.

றேடியோஸ்பதி
766, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(B/ 1245)

றம் சாட்டினார்.

தமிழகத்தில் 1988இல் ஜனாதிபதி ஆட்சி நடைபெற்றபோது விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டு உட்பட பலர் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டதை கண்டித்த கருணா

## ஏற்றுக்கொள்ளப்படும்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாண சபை தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமை முதல் ஏற்றுக்கொள்ளப்படும் என தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள எட்டு மாவட்டங்களின் கச்சேரிகளில் இவை ஏற்றுக்கொள்ளப்படும்.

அடுத்த மாதம் 1ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக இவை செலுத்தப்பட வேண்டும்,

எதிர்வரும் 31ஆம் திகதி வரை சுயேட்சைக்குழுக்களிடமிருந்து வைப்புத்தொகை ஏற்றுக்கொள்ளப்படும்.

கடந்தவாரம் ஈழநாதத்தில் வந்த செய்தியையடுத்தே இத்தகவல் தெரிவிக்கப்பட்டது. (மு)

கோட்டை லயன்ஸ் கழக தலைவர் கேட்டுக்கொள்கின்றார்.

## இராணுவ நடவடிக்கைக்கு சுதந்திரக்கட்சி முழு ஆதரவு

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் இடம்பெறும் யுத்தத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளை முழுமையாக ஆதரிப்பதாக சுதந்திரக்கட்சி எம்.பி.யான அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு பிரச்சினைத் தீர்வுக்கு யுத்தத்தை தவிர வேறுவழி இப்போது தோன்றவில்லை என்று சுதந்திரக் கட்சி எம். பி. லக்ஸ்மன் ஜெயக்கொடி கூறியுள்ளார்.

## இந்து ஆலயத்தின் மீதான தாக்குதலுக்கு கண்டனம்

(கொழும்புத்துறை)

''வடக்குக் கிழக்கு மாகாணத்தில் பரவலாக இந்துசமயத்தவர்களின் வழிபாட்டுத் தலங்களை ஸ்ரீலங்கா அரசாங்கம் திட்டமிட்டுத் தாக்கிச் சேதப்படுத்தி, அழிக்க முனைகின்றது. இச்செயலை வன்மையாக கண்டிக்கிறோம்'' என்று யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை கண்டனம் தெரிவித்துள்ளது.

''கிழக்கு மாகாணத்தில அம்பாறை மாவட்டத்தில் உள்ள பிள்ளையார் ஆலயம் வெகுவாகத் தாக்கப்பட்டுள்ளது. நல்லூர் ஸ்ரீ முருகன் ஆலயச் சூழலிலும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

''தமிழ் மக்களது பாரம்பரிய பூமியில் இச் சமயம் அழிப்பு நடவடிக்கைகளைத் தடுக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்'' என்று பேரவையின் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

''கடந்த காலங்களிலும் ஸ்ரீலங்கா அரசாங்கம் பல வழிபாட்டுத் தலங்களை நாசமாக்கிப் பூண்டோடு அழித்துள்ளது'' என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

### பாகிஸ்தான்

## கடற்படைக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில்

(கொழும்பு)

பாகிஸ்தான் கடற்படைக்கு சொந்தமான இரண்டு கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளன.

இந்தக் கப்பல்களில் வந்துள்ள அதிகாரிகளை, பாகிஸ்தான் அரச பிரதிநிதிகளையும் இலங்கையின் பாதுகாப்புத் துறையின் அதிகாரிகள் சந்தித்துப் பேசுவார்கள் என்று கொழும்பு அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியப் படையினர் இங்கிருந்து கடந்த மார்ச் மாதம் சென்றதன் பின்பு பாகிஸ்தானின் கடற்படையை சேர்ந்த நான்கு கப்பல்கள் கொழும்புத்துறைமுகத்துக்கு வந்துள்ளதாக இந்திய வானொலி அறிவித்துள்ளது.

## கள்ளிறக்கத் தடை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதன்கிழமை முதல் கள் இறக்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இன்றைய நாட்டு நிலைமை காரணமாக சீனி, சர்க்கரைக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டைக் காரணம் காட்டி பனங்கட்டி உற்பத்திக்காக அனைத்துச் சீவல் தொழிலாளிகளையும் கருப்பநீர் உற்பத்தி செய்வதற்கு ஒத்துழைக்குமாறு தமிழ்ஈழ ஆய்வு நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது. (58)

### யாழ். பல்கலைக்கழக

## விஞ்ஞான பீட பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக 1989ஆம் ஆண்டிற்குரிய உயிரியல்விஞ்ஞானபீட முதல் பரீட்சையின் முடிவுகள் 10-7-90-ல் வெளியாகி உள்ளன. அப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களின் விபரம் வருமாறு.

செல்விகள் ஏ. எஸ். ஒகஸ்ரி, ஏ. சபாநாதன், ஏ. சிவப்பிரகாசம், ஈ. ஜோன், ஆர். கீதாஞ்சலி, என். ஞானபோதினி, ஜி. ஜி. ஜோசப், என். இந்திராதேவி, ஜே. நவரட்ணசிங்கம், கே. சிவராஜா, கே. கந்தசாமி, அன்ரனி மரியநாயகம், மாலினி, எம். ராஜரட்ணம், ஜீவரட்ணம், எம். சிவராஜா, என். நந்தினி, எம். நிரஞ்சனி, ஆர். மாணிக்கம், எஸ். சத்யா, என். செல்வராஜா, எஸ். சரவணமுத்து, எஸ். சிவபாதசுந்தரம், கே. ஏ. சிவஅருள்ராஜா, எஸ். சுப்பிரமணியம், ரி. சுபானந்தி, என். சுதாமதி, எஸ். கார்த்திகேசன், கே. சுகன்யா, வி. நவரட்ணம், யூ. சண்முகம், ஆர். தயாளினி, ஜே. ஜெயசிங்கம், வி. தில்லைநாயகம், ஆர். துரைராஜா, எஸ். குணரட்ணம், ஜி. சிறிஸ்கந்தராஜா, எம். சியாமளா, எஸ். சுந்தரமூர்த்தி, எஸ் குகதாசன், எஸ். செல்லத்துரை, எச். கதிரவேலு, கே. கிருஷ்ணவேணி, எம். சிகிலா, எஸ். வளர்மதி, எஸ். சுதாகரி, கே. கலாதேவி, ரி. சகிலா, எஸ். சுபோதினி, வி. சுபத்திராதேவி, என். கற்பகராணி, ஆர். யசோதா, எம். எஸ். எம். பற்றிக், திருவாளர்கள். தர்மநாத், ஆர். ஞானச்செல்வம், ரி. வினோபா, கே. எஸ். மொகமட்மகிரூன், எம். எஸ். மொகமட் நிசார், எம். ராம்குமார், கே. ராமச்சந்திரன், எஸ். உனைஸ், எம். ரவீந்திரன்.

நூனசித்தியில் திரு. ரி. சுயோதரன், செல்விகள் கே. சுலோசனா, கே. துரைராஜா.

மீள நூனசித்தியில் செல்வி சுதாம்பிள்ளை.

## வேண்டுகோள்

(சுழிபுரம்)

நல்லொழுக்க சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் கிளைச் சங்கங்கள் தங்கள் பகுதிகளில் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வந்த மக்களுக்கு வேண்டிய அத்தியாவசிய உதவிகளையும், ஆறுதல் பெறக்கூடிய ஆலோசனைகளையும் வழங்கி அவர்களின் கஷ்டங்கள் நீங்கக்கூடிய வழிமுறை அறிந்து உதவி செய்யுமாறு வடபிராந்திய நல்லொழுக்க சம்மேளனம் வேண்டிக்கொள்கின்றது.

## அகதிகளுக்கான உதவிப் பணம்

தெல்லிப்பளை உதவி அரசாங்க பிரிவில் உள்ள சகல பயிலுனர் ஆசிரியர்களும் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி உங்கள் 1நாள் சம்பளப் பணமான 50 ரூபா உதவிப் பணத்தை எதிர்வரும் திங்கட்கிழமை (16 07 90)அளவெட்டி யா/அருணோதயக் கல்லூரியில்காலை9.00-10.00 வரை ஏற்றுக் கொள்ளப் படும். சகல ஆசிரியர்களும் தவறாது உங்கள் உதவிப் பணத்தை வழங்குமாறும் அத்தோடு அடையாள அட்டை எடுப்பது சம்பந்தமான விடயமும் ஆலோசிக்கப்படுவதால் தவறாது சமுகம் தருமாறு செயலாளர் கேட்டு கொள்கின்றார்.

## ஷெல் தாக்கி இருவர் பலி

(தெல்லிப்பழை)

குரும்பசிட்டி தென்மேற்குப் பகுதியில் உள்ள முதலியார் வைரவர் கோவிலுக்கு அண்மையாக கடந்த திங்கள் இரவு பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் விழுந்து வெடித்ததனால் ஸ்தலத்திலேயே இருவர் கொல்லப்பட்டனர். இறந்த இருவரும் வசாவிளான் குட்டியப்புலத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளர்கள் என அறியப்படுகின்றது.

அன்றிரவு வசாவிளான் பக்கமாக தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

(26)

தரமான - நாகரிகமான
'சேட்டிங்' துணி வகைகள்
வேட்டிகள் மற்றும்
புடைவை வகைகளின்
உற்பத்தியாளர்களுள் தனித்துவம்
மிக்கவர்கள்

கணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

தாவடி வடக்கு,
கோக்குவில்.

உங்கள் திருப்தியே
எங்கள் மகிழ்ச்சி!

(B1220)

வாடிக்கையாளர்கள்கவனத்திற்கு

ஒலிப்பதிவு திருத்த வேலைகளுக்காக எம்மிடம் பொருட்களை ஒப்படைத்த வாடிக்கையாளர்கள் கீழ்க்கண்ட முகவரியில் உடன் தொடர்பு கொள்ளவும்.

ரேடியோஸ்பதி
766, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(B/ 1245)

இடம்மாற்றம்

அம்பிகாபதி பேன்சி கூட்ஸ்

66, பெரிய கடை வீதி யாழ்ப்பாணத்தில்
இயங்கி வந்த எமது ஸ்தாபனம்
கீழ்க்காணும் விலாசத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இல. 54, அம்மன் றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

09-07-1990 திங்கட்கிழமை தொடக்கம் விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதைஎமது வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

(B/ 1247)

இடம்மாற்றம்

ஸ்ரீலங்கா புத்தகசாலை

234, K. K. S.வீதி யாழ்ப்பாணத்தில்
இயங்கி வந்த எமது ஸ்தாபனம்
சூழ்நிலை காரணமாக இப்போது

14, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்

என்ற முகவரியில் தற்காலிகமாக நடைபெறுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

நிர்வாகி.

(B/ 1248)

சிந்தனைக்கு

''கோழைக்குப் பால் கொடுத்தேன்
குப்புற வீழ்ந்து கிடக்கும்
கோழைக்குப் பெயர் போர் வீரனா?''

-புறநானூறு

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 13-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2808
த. பெ. எண் 05

## பழந்தமிழர் பரம்பரை

நாட்டைக் காப்பதற்காகப் போர்க்களம் சென்ற கணவன் போர்க்களத்தில் வீரமரணம் எய்தினான் என்ற செய்தி மனைவிக்கு எட்டுகிறது.

அவள் அழுதுகுளறி ஒப்பாரி வைக்கவில்லை. எதிரிகளைத் துவம்சம் செய்தபோது எங்கோ இருந்து ஏவிவிடப்பட்ட அம்பை மார்பிலே ஏந்தி மடிந்தான் என்பதை அறிந்து மகிழ்ந்தாள்.

அதுமட்டுமல்ல கணவன்இறந்தபின்பால்மணம் மாறாத தனது ஒரேயொரு செல்வமகனையும் இரத்தத்திலகமிட்டு வாளும் வேலும் கொடுத்துப் போர்க்களத்துக்கு மகிழ்ச்சியோடு அனுப்பி வைக்கிறாள்.

அந்தச் சிறுவனும் போர்க்களத்தில் வீரப்போர்புரிந்து மாண்டுவிடுகின்றான். போர்க்களத்தில் செய்தி கொண்டுவந்தவர்களில் ஒருவன் ''உன்மகன் முதுகில் அம்புபட்டு மாண்டுபோனான்'' என்று கூறுகின்றான்.

இந்தச் செய்திகேட்டு அந்த வீரத்தாய் துடித்துக் கூனிக்குறுகிப் போகிறாள். ஆனாலும் அந்தச் செய்தியை அவள் நம்பவில்லை. இப்பொழுதே போர்க்களம் போகிறேன். என்மகன் முதுகில் புண்பட்டு இறந்திருந்தானானால் அவனுக்குப் பால்கொடுத்த என் மார்பையே அறுத்து எறிந்துவிடுகிறேன் என்று சூளுரைத்துப் போர்க்களத்திற்குச் செல்கிறாள்.

அங்கு அவள் மகன் நெஞ்சில் பாய்ந்த வேல் துளைத்துக்கொண்டு முதுகுப்புறம் வந்து நின்றதைக் கண்டு அவனைப் பெற்றபொழுது அடைந்தமகிழ்ச்சியைவிட பல மடங்கு பூரித்துப் போகின்றாள்.

இது புறநானூற்றில் வரும்பழந்தமிழர்பெருமையைப் பறைசாற்றும் பாடல் கூறும் கதை.

''கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன் தோன்றிய மூத்தகுடி தமிழன்'' என்று பெருமை பேசும் இன்றைய தமிழ்ப் பரம்பரை இன்று என்ன செய்கிறது?

1977 ஆம்ஆண்டு இனக்கலவரத்தைச் சாட்டாகவைத்து எமது இன்றைய தாய்க்குலம் கணவனை வெளிநாட்டுக்கு அனுப்பியது.

# அயர்லாந்தில் அல்ஸ்ரர், பாலஸ்தீனத்தில் காஸா, தமிழீழத்தில் திருமலை?

இலங்கையில் சிறிலங்கா அரசு மேற்கொள்வது இனப்படுகொலை. இதற்கு வேறு எந்த விளக்கமும் கொடுக்க முடியாது, தேவையுமில்லை. விடுதலைப்புலிகளுடன் போர் எனச் சொல்லிக் கொண்டு தமிழ்மக்கள் மீது சிறிலங்கா அரசு அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. சிறிலங்கா இராணுவமும் சிங்களக் காடையர்களும் இந்தஇன அழிப்பில்தீவிரமாக ஈ பட்டுள்ளார்கள். இவ்வினப்படுகொலையால் தமிழரைப் பலவீனப்படுத்துவதும் அவர்களைச் சொந்த மண்ணில் இருந்துவிரட்டுவதும் இலங்கை அரசின் நோக்கமாகும்.

இனப்படுகொலையை சிறிலங்கா அரசு கட்டவிழ்த்து விட்டுள்ள போது எமது மக்களில் பெரும்பாலானோர் மனோ நிலை அதை எதிர்கொள்ள அல்லது எதிர்த்துப் பேரராடக் கூடிய நிலையில் இல்லை என்பதே இன்று கவலையளிக்கும் விடயமாக உள்ளது. பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்காமல் பிரச்சினைகளில் இருந்து தப்பித்துக் கொள்வதே எமது பெரும்பாலான மக்களின் மனோபாவமாக இருக்கின்றது.

இதனால் மக்களுக்கு நாம் சில வரலாற்று நிகழ்வுகளைக் கூறி வைக்க வேண்டியது எமது முக்கியமான கடப்பாடாகும்.

### யூதர்களின் உணர்வு

இன்று இலங்கைத் தமிழர் எவ்வாறு மேற்கு ஐரோப்பாவிற்கு இடம் பெயர்கின்றார்களோ இதேபோன்று தான் யூதர்களும் சிலுவைப்போருக்கு பிற்பாடு பாலஸ்தீனத்தில் இருந்து ஐரோப்பாவிற்கு இடம்பெயர்ந்தார்கள்ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் குடியேறினார்கள்.

பொதுவாகக் கூறுபவர்கள் யூதர்களும் இலங்கைத் தமிழர்களும் குறிப்பிட்ட சில பண்புகளில் ஒற்றுமை கொண்டவர்கள் எனச் சொல்வதுண்டு. அப்பண்புகளின் அடிப்படையில் எத் தொழிலுக்கும் தயாராக இருத்தல், பணம் சேகரித்தல் போன்ற அம்சங்கள் முக்கியமானவையாகும். ஐரோப்பாவிற் குடியேறிய யூதர்கள் படிப் படியாக வளர்ந்து செல்வந்தர்களானார்கள். கல்வி மேதைகளாகவும் விஞ்ஞானிகளாகவும் அரச அதிகாரிகளாகவும் அந்நாடுகளில் முதலிடம் பெற்ற

பெற்றேயாக வேண்டும் என்ற முடிவிற்கு வந்தார்கள். அன்றைய நிலையில் அவர்கள் தமது மூதாதையினரின் பூமியாகிய பாலஸ்தீன மண்ணை முத்தமிட்டு விட்டு இறந்தால் போதும்எனத் துடித்தார்கள். சைபிரஸிலும்ஏனைய ஐரோப்பிய முகாம்களிலும் இருந்து களவாக கப்பல்களில் ஓடி வந்த யூதர்கள் (பிரிட்டனின் மறைமுக உதவியும் இருந்ததும்) பாலஸ்தீனக் கரையில் இறங்கியதும் மண்ணை வீழ்ந்து முத்தமிட்டார்கள்; அள்ளிக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்கள்.

இந்தளவிற்கு யூதர்களுக்கு மண்ணின் மீதுள்ளபாசத்தை பற்றை உணர்த்தியது; எது? மேற்கு ஐரோப்பாவில் அவர்கள் ஒடுக்கப்பட்டது அழிக்கப்பட்டது என்பது தான். வரலாற்றைநாம்படிப்பது என்ன சம்பவங்கள் இடம் பெற்றனஎன்பதற்கல்ல, அது எதை எமக்குப் போதிக்கின்றது என்பதை உணர்வதற்காகத்தான்.

இன்று வடக்கு கிழக்கில் இருந்து வெளியேறும் தமிழர்கள் மேற்குலகிற்குச் செல்கின்றாக்கள். அன்று யூதர்கள் பரந்து வாழ்ந்தது போன்று இன்று சகல ஐரேப்பியநாடுகளிலும் வாழ்கின்றார்கள். பணம் தேடுவதில் தீவிரமாக உள்ளார்கள். ஆனால் தமிழர்கள் ஆரம்பத்தில் மேற்குலகிற்குச் செல்லும் போது இருந்ததைவிட இன்று தமிழர்களுக்கு எதிர்ப்புகள் அதிகமாக உள்ளன. அதுவும் மாறிவரும் ஐரோப்பிய நிலைமைகள் நெருக்கடிகளை மேலும் தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை.

ஏஜபோ

இங்கு நெருக்கடியை எதிர்கொள்ள மனமின்றி வெளியேறும் தமிழர்கள் அங்கு நெருக்கடிக்கு எவ்வாறு முகம் கொடுப்பார்கள். திரும்பி வருவதற்கு இங்கும் சாதகமான நிலை இருக்கும் என்பதற்கும் உறுதி கூற முடியாது. ஏனெனில் சிங்கள அரசாங்கம் தமிழர்மீது இனப்படுகொலைக் கட்டவிழ்த்து விட்டு

உணர்வுபூர்வமாகப் போராடுகின்றார்கள்.

இஸ்ரேல் ஆக்கிரமித்த பகுதிகளான காஸா, மேற்குக் கரைப்பகுதியின் மக்கள் தொடர்ந்துபோராடுகின்றார்கள் இஸ்ரேலிய இராணுவம் கண்மூடித்தனமாகதுப்பாக்கிப் பிரயோகம் செய்யும். சித்திரவதை செய்யும், படுகொலை செய்யும் என்பதெல்லாம் அந்தப் பாலஸ்தீன மக்களுக்குத் தெரியாததல்ல. ஆனால் அவர்கள் இராணுவம் சுட்டாலும், சித்திரவதை செய்தாலும் தமது எதிர்ப்பைக் காட்டிக் கொண்டே உள்ளார்கள்.

அவர்கள் எதுவித பாதுகாப்பு மற்ற நிலையில் ஆண், பெண், முதியோர், குழந்தைகள் என்ற வேறுபாடு இன்றி தமது எதிர்ப்பைக்காட்டுகின் கின்றார்கள். இறக்கிறார்கள், சித்திரவதைப்படுகின்றார்கள் சிறைப் படுகின்றார்கள்.

அவர்கள் ஏன் தமது உயிரைப் பணயம் வைத்து இப் போராட்டத்தில் ஈடுபடுகின்றார்கள். தமக்கு என்றொரு மண் சொந்தமாக ஆக்கப்பட வேண்டும் என்பதற்காகவே. தம்மைச் சுற்றி இருபத்தி இரண்டு அரபு நாடுகள் இருப்பினும், தமக்கென தமது சொந்த பூமியில் தான் தாம் சுதந்திரமாக வாழமுடியும் எனப் பாலஸ்தீனியர்கருதுவதினாலேயே அவர்கள் இப் போராட்டங்களை நடத்துகின்றார்கள்.

தங்கள் இன மக்கள் பரந்து வாழும் இருபத்தி இரண்டு அரபு நாடுகளும் பெயரளவில் ஆதரவு தந்தாலும் அரசினதும், ஆட்சியாளரினதும் நலனுக்காக தாம் பகடைக்காய்களாக அவர்களால் ஆக்கப்பட்டதை அவர்கள் வரலாற்று ரீதியாக தெளிவாக உணர்ந்துள்ளார்கள். இதனால் தான் தமக்கென ஒரு சுதந்திர பூமிக்காக அவர்கள் போராடுகின்றார்கள். இதனை எமது தமிழ் மக்களும் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

### அயர்லாந்தில்

அயர்லாந்தினர் ஒரு பகுதியில் இருந்து இன்னும் ஆக்கிரமிப்பாளரை வெளியேற்ற முடியவில்லை. அவ்வாறு ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற முடியாமைக்குத் துணையாக இருந்தது குடியேற்றமே.

அயர்லாந்து அல்ஸ்ரர், முன்ஸ்ரர், லீன்ஸ்ரர், கொன்னாச் ஆகிய நான்கு மாகாணங்களைக்கொண்டது. இந்த அயர்லாந்து மக்கள் ஐரிஷ் மொழியைப் பேசுவதோடு, கத்தோலிக்கருமாவார்கள்.

அயர்லாந்து ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட வேளையில் தமக்கு எழுந்த எதிர்ப்பால்நீண்டகாலம் அயர்லாந்து தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டுமானால் அயர்லாந்தில் ஆங்கிலேயரின் குடியேற்றங்களை நிறுவுவதே வழியெனக் கண்டனர். இக் குடியேற்றங்களை நிறுவுவதற்கு பிரித்தானியாவில் இருந்த கொலைக் குற்றவாளிகள், திருடர்கள், வீதிகளில் அலைந்து திரிந்த காடையர்கள் ஆகியோரைத் தெரிவு செய்து குடியேற்றப்பட்டார்கள்.

மேலும் மத்தியகால ஐரோப்பாவில் ஏற்பட்ட மத மாற்றம் ஆங்கிலேயரை புரட்டஸ்தாந்துக்களாக்கியது. இதன் நிமித்தம் அயர்லாந்தில் குடியேறிய ஆங்கிலேயரும் புரட்டஸ்தாந்துகளாக மாறினர். இதன் காரணமாக அயர்லாந்தில் குடியேறியவர்கள் மொழியால். மதத்தால் அனைத்து மக்களைவிட வேறுபட்டு இருந்தனர்.

ஆங்கிலக் குடியேற்றங்கள் படிப்படியாக வளர்ந்து வட அயர்லாந்தில் அதாவது அல்ஸ்ரர் மாகாணத்தின் பூர்வீக குடிகளைவிட அதிகமானவர்களாகிவிட்டார்கள். அதாவது இன்று இலங்கையில் திருக்கோணமலை, அம்பாறை மாவட்டங்கள் எவ்வாறு சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதோ அதே போன்று.

மேற்பட்ட போராட்டத்தாலும் குடியேற்றத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட மண்ணை மீட்க அயர்லாந்துப் போராளிகளால் முடியவில்லை.

### இராணுவத்தை விட குடியேற்றங்கள் பயங்கரமானவை

இதிலிருந்து வரலாறு எமக்கு ஒன்றைத் தெளிவாக உணர்த்துகின்றது. இராணுவ ஆக்கிரமிப்பைவிட குடியேற்றம் மூலம் ஆக்கிரமிக்கப்படுதல் பயங்கரமானதாகும். அவர்களை அம்மண்ணிலிருந்து வெளியேற்றுவது இலகுவானதல்ல.

ஓர் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியைப் பாதுகாப்பதற்கு குடியேற்றங்கள் எவ்வாறு முதன்மையானது என்பதை அரசியற் சிந்தனையாளரான மாக்கியாவல்லி திறம்பட விளக்கியுள்ளார். ''ஒருஅரசன் (அரசு) தான் கைப்பற்றிய பகுதியைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமாயின் அங்கு தனது குடியேற்றங்களை ஸ்தாபிப்பது இராணுவ முகாம்களை ஸ்தாபிப்பதைவிட மேலானதாகும். ஏனெனில் இராணுவத்திற்கு அரசனே ஊதியம் கொடுக்க வேண்டும். அதே வேளை இராணுவத்தினர் இந்த மண்ணிற்குப் பரீட்சயமானவர்கள் அல்ல. ஆனால் குடியேற்ற வாசிகள் அவ்வாறில்லை. அவர்கள் விரைவில் அந்த மண்ணிற்குப் பரிச்சயமாகி விடுவார்கள். அவர்களுக்கு அரசன் ஊதியம் கொடுக்க வேண்டியதில்லை.

அவர்கள் கூலிக்கு மாரடிப்பவர்களாகவன்றி சந்ததி சந்ததியாக தமது உயிர் வாழ்விற்காக உணர்ச்சியோடு நின்று தாக்குப் பிடிக்கக் கூடியவர்கள். எனவே குடியேற்றம் இராணுவத்தைவிட மேலான நிரந்தர இராணுவமாகும்'' எனக் குறிப்பிட்டார்.

இன்று கிழக்கு குறிப்பாக திருக்கோணமலை பாலஸ்தீனியர்களின் காஸா, மேற்குக் கரை, அயர்லாந்தின் அல்ஸ்ரர் மாகாணம் போன்றே

> இக் கட்டுரையின் மூலம் யூதர்களின் நடவடிக்கைகளை நான் ஆதரிப்பதாக இல்லை.
> மண் மீதான பற்றுக்கு உதாரணமாகவே யூதர்கள் எடுக்கப்பட்டுள்ளார்கள்.

அவள் நம்பவில்லை. இப்பொழுதே போர்க்களம் போகிறேன். என்மகன் முதுகில் புண்பட்டு இறந்திருந்தானானால் அவனுக்குப் பால்கொடுத்த என் மார்பையே அறுத்து எறிந்துவிடுகிறேன் என்று சூளுரைத்துப் போர்க்களத்திற்குச் செல்கிறாள்.

அங்கு அவள் மகன் நெஞ்சில் பாய்ந்த வேல் துளைத்துக்கொண்டு முதுகுப்புறம் வந்து நின்றதைக் கண்டு அவனைப் பெற்றபொழுது அடைந்தமகிழ்ச்சியைவிட பல மடங்கு பூரித்துப் போகின்றாள்.

இது புறநானூற்றில் வரும்பழந்தமிழர்பெருமையைப் பறைசாற்றும் பாடல் கூறும் கதை.

''கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன் தோன்றிய மூத்தகுடி தமிழன்'' என்று பெருமை பேசும் இன்றைய தமிழ்ப் பரம்பரை இன்று என்ன செய்கிறது?

1977 ஆம்ஆண்டு இனக்கலவரத்தைச் சாட்டாகவைத்து எமது இன்றைய தாய்க்குலம் கணவனை வெளிநாட்டுக்கு அனுப்பியது.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தை வைத்து தனது மகனை வேலைவாய்ப்புத்தேடி அகதியாக வெளிநாட்டுக்கு அனுப்பியது.

இப்போது 1990ஆம்ஆண்டுப்போரில்விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்து மண்ணையும் மக்களையும் காப்பதற்காகப் போர்க்களத்தில் நிற்கும் தமது அடுத்த மகனையும் வெளிநாட்டுக்கு அகதியாக அனுப்பிப் பணம் சம்பாதிப்பதற்காக தனது மகனைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி புலிகளுடன் வாதிட்டுக் கொண்டு இருக்கிறது இன்றைய தாய்க்குலம்.

விடுதலைப் புலிகள் முக்கிய பிரமுகர் தேவர் இப்படி ஒரு கூட்டத்தில் தாய்க்குலத்தை ஒப்பிட்டுக் கூறியிருந்தார்.

இந்த நிலையிலும் தம்மக்களைப் போர்க்களத்துக்கு மகிழ்ச்சியோடு அனுப்பிவைக்கும் தாய்மார்களும் இருக்கவே செய்கிறார்கள்.

ஆண்மகனை மட்டுமல்ல பெண்பிள்ளைகளைக் கூடப் போர்க்களத்துக்கு அனுப்பிப் பூரித்து நிற்கும் தாய்மார்களும் நம்மிடையே இருப்பதால்தான் போர் தொடங்கி ஒருமாதமாகியும் இன்னமும் தமிழினம் தலை நிமிர்ந்து நிற்கக் கூடியதாக இருக்கின்றது.

புறநானூற்றுமறவர்பரம்பரைஇன்னமும் நம்மிடையே இல்லாமல் போகவில்லை என்பதையிட்டு தமிழ் கூறும் நல்லுலகமே பெருமைப்படலாம்.

---

யூதர்களும் சிலுவைப்போருக்கு பிற்பாடு பாலஸ்தீனத்தில் இருந்து ஐரோப்பாவிற்கு இடம்பெயர்ந்தார்கள்ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் குடியேறினார்கள்.

பொதுவாகக் கூறுபவர்கள் யூதர்களும் இலங்கைத் தமிழர்களும் குறிப்பிட்ட சில பண்புகளில் ஒற்றுமை கொண்டவர்கள் எனச் சொல்வதுண்டு. அப்பண்புகளின்அடிப்படையில் எத் தொழிலுக்கும் தயாராக இருத்தல், பணம் சேகரித்தல் போன்ற அம்சங்கள் முக்கியமானவையாகும். ஐரோப்பாவிற் குடியேறிய யூதர்கள் படிப் படியாக வளர்ந்து செல்வந்தர்களானார்கள். கல்வி மேதைகளாகவும் விஞ்ஞானிகளாகவும் அரச அதிகாரிகளாகவும் அந் நாடுகளில் முதலிடம் பெற்றனர்.

ஆனால் அங்குள்ள தேசிய இனங்கள் விழித்துக் கொண்டதும் ஐரோப்பாவின் ஒவ்வொரு மூலையிலும் இருந்து துரத்தப்பட்டார்கள். கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட யூத எதிர்ப்பு தங்குதடையின்றி மேற்கு ஐரோப்பாவரை படர்ந்தது. எல்லாவற்றிக்கும் மேலாக ஜேர்மனியில் யூதர்கள் இலட்சக் கணக்கில் படுகொலை செய்யப்பட்டபோது தான்யூதருக்குஎன்றொரு மண் இருந்தேஆக வேண்டும் என்ற திட்ட வட்டமான முடிவிற்கு யூதர்கள்வந்தார்கள். எப்பாடு பட்டாவது எவ்வளவு இழப்புக்களைச் சந்தித்தாவது யூதர்களுக்கு என்று ஒரு நாடு

...கிற்குச் செல்லும் போது இருந்ததைவிட இன்று தமிழர்களுக்கு எதிர்ப்புகள் அதிகமாக உள்ளன. அதுவும் மாறிவரும் ஐரோப்பிய நிலைமைகள் நெருக்கடிகளை மேலும் தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை.

இங்கு நெருக்கடியை எதிர் கொள்ள மனமின்றி வெளியேறும் தமிழர்கள் அங்கு நெருக்கடிக்கு எவ்வாறு முகம் கொடுப்பார்கள். திரும்பி வருவதற்கு இங்கும் சாதகமான நிலை இருக்கும் என்பதற்கும் உறுதி கூற முடியாது. ஏனெனில் சிங்கள அரசாங்கம் தமிழர்மீது இனப்படுகொலையைக் கட்டவிழ்த்து விட்டு ஆக்கிரமிக்கப்பார்கிறது. ஆக்கிரமித்துள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட மண்ணில் இருந்து ஒரு இனவாத அரசை வெளியேற்றுவது அவ்வளவு சுலபமான காரியமாக இருக்காது என்பது மட்டும் உண்மை.

### காஸா மேற்குக்கரையில் பாலஸ்தீனியர்கள்

இஸ்ரேலியரால் ஆக்கிரமிக்கப்பட்ட மண்ணில் இருந்து அவர்களை வெளியேற்றுவதற்கு பாலஸ்தீனர்கள் பல வருடகாலமாகப்போராடுகின்றார்கள். ஆனால் ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேறவில்லை. ஆனால் அங்கு மக்கள் இன்னும் போராடுகிறார்கள்.

---

...கின்றார்கள். ...மாறினர். இதன் காரணமாக ...களுக்கு அரசன் ஊதியம்

# தமிழீழத்தில் திருமலை?

தங்கள் இன மக்கள் பரந்து வாழும் இருபத்தி இரண்டு அரபு நாடுகளும் பெயரளவில் ஆதரவு தந்தாலும் அரசினதும், ஆட்சியாளரினதும் நலனுக்காக தாம் பகடைக்காய்களாக அவர்களால் ஆக்கப் பட்டதை அவர்கள் வரலாற்று ரீதியாக தெளிவாக உணர்ந்துள்ளார்கள்.இதனால் தான் தமக்கென ஒரு சுதந்திர பூமிக்காக அவர்கள் போராடுகின்றார்கள். இதனை எமது தமிழ் மக்களும் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

### அயர்லாந்தில் அல்ஸ்ரர்

ஆக்கிரமிப்பாளரிடம் குடியேற்றங்களால் இழந்த மண்ணைமீட்பதென்பதுஇலகுவான காரியமல்ல. இதற்குப் பாலஸ்தீனத்தைப் போன்று அயர்லாந்தும் சிறந்ததொரு உதாரணமாகும். 1166 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் - நோமன்ஸியார் படை எடுப்பால் அயர்லாந்து ஆக்கிரமிக்கப் பட்டது. ஆனால் அன்றிலிருந்தே அயர்லாந்து மக்கள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராடிவருகின்றார்கள். ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான போராட்டம் அம்பு, வில்லில் இருந்து ஆரம்பித்து பீரங்கிகள், ராக்கெட்டுகள் வரை வந்துள்ள போதிலும் அயர்லாந்தில் குடியேறியவர்கள் மொழியால், மதத்தால் அனைத்து மக்களைவிட வேறுபட்டு இருந்தனர்.

ஆங்கிலக் குடியேற்றங்கள் படிப்படியாக வளர்ந்து வட அயர்லாந்தில் அதாவது அல்ஸ்ரர் மாகாணத்தின் பூர்வீக குடிகளைவிட அதிகமானவர்களாகிவிட்டார்கள். அதாவது இன்று இலங்கையில் திருக்கோணமலை, அம்பாறை மாவட்டங்கள் எவ்வாறு சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதோ அதே போன்று.

ஆனால் அயர்லாந்தில் தொடர்ந்தும் ஆக்கிரமிப்பாளருக்கு எதிராகப் போராட்டம் நடந்து கொண்டே இருந்தது. ஆனால் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்த போதும் வடஅயர்லாந்து போராளிகளின் கட்டுப்பாட்டினுள் கொண்டுவர முடியவில்லை. அங்கிருந்த ஆக்கிரமிப்பாளர்களின் குடியேற்றங்கள் அதற்குத் தடையாக இருந்தன. இதனால் 1948ஆம் ஆண்டு அயர்லாந்து சுதந்திரம் பெற்றபோதும் குடியேற்றங்களினால் ஆக்கிரமிக்கப் பட்ட பாகமும் அவர்களிடமே இருக்க மிகுதிப் பாகமே சுதந்திரம் அடைந்தது. அதாவது 750 வருடங்களுக்கு கொடுக்க வேண்டியதில்லை.

அவர்கள் கூலிக்கு மாரடிப்பவர்களாகவன்றி சந்ததி சந்ததியாக தமது உயிர் வாழ்விற்காக உணர்ச்சியோடு நின்று தாக்குப் பிடிக்கக் கூடியவர்கள். எனவே குடியேற்றம் இராணுவத்தைவிட மேலான நிரந்தர இராணுவமாகும்'' எனக் குறிப்பிட்டார்.

இன்று கிழக்கு குறிப்பாக திருக்கோணமலை பாலஸ்தீனியர்களின் காஸா, மேற்குக் கரை,அயர்லாந்தின் அல்ஸ்ரர் மாகாணம் போன்றே தாயக மண்ணில் இருந்து குடியேற்றக்காரர்களால் தமிழ் மக்கள் விரட்டப்பட்டு உள்ளார்கள். இந்நிலை தொடருமானால் தமிழர் தாயகத்தில் இருந்தே தமிழர்கள் விரட்டப்படுவார்கள்.

இந் நிலை ஏனைய பகுதிகளில் தொடராமல் இருப்பதற்கும், இழந்த மண்ணை மீட்பதற்கும் தமிழ் மக்கள் அனைவரும் போராடியே ஆக வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் இந்த மண்ணில் இருந்து எம்மை ஆக்கிரமிப்பாளர்கள் விரட்டுவதில் வெற்றியடையக்கூடும். □

---

# இனம் காக்கும் இரத்ததானம்

பூதானம், கோதானம், கன்னிகாதானம், அக்கினிதானம், அன்னதானம், சொர்ணதானம் எனப்பல தானங்கள் செய்தவன் தமிழன். தானம் செய்வதில் பேரானந்தம் கண்டவன் தமிழன்.

அன்னம் சுரந்த அமுதசுரபி அவனது வள்ளன்மை. வாடிய முல்லைக்கு பொற்தேர் ஈந்தது அவனது வரலாறு. பிள்ளைக்கறி பிரியமாக உண்ண வந்த அடியார்க்கு பிள்ளைக் கறி சமைத்துப்பரிமாறியது அவனது புராணம்.

இன்னும் வீதியோர வீடுகளில் காணும் திண்ணைகள், சுமைதாங்கி, அவன் தர்மசிந்தனைக்கு சான்றிதழாக இருக்கின்றன. அவனின் தர்மக்கரம் மனிதனுக்கு மட்டும் நீட்டப்படவில்லை மிருகங்களிடம் அவன் கரம் நீண்டது. நீர்த்தொட்டிகள், ஆவுரஞ்சிக் கற்கள், எல்லாம் அவனின் ஜீவகாருணியத்திற்கு எடுத்துக்காட்டாக இன்றும் இருக்கின்றன.

இனத்தொகை பெருக இடப்பிரச்சினை, பொருளாதாரப்பிரச்சினைகள் தலைதூக்கின. தர்மம் வழங்க விரித்த கரங்கள் இன்று முஷ்டி முத்திரை பிடிக்க எத்தனிக்கின்றன. அன்று சொர்ணதானம் செய்தவன் இன்று முற்றாக அதை மறக்கவில்லை. நாட்டின் நலம் காக்க தங்கதானம் செய்தவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் இரத்ததானம் செய்வதென்றால் ஆமை தலை கால்களை உள்ளுக்கு இழுத்து ஒளிப்பது போல் இவர்களும் ஒளிப்பதில் விமோசனம் காண்கிறார்கள்.

எமது மக்களில் இரத்ததானம் செய்யும் தர்மமில்லை' போராளியே போராளிக்கு இரத்ததானம் செய்து விட்டு போர்க்களத்தில் போராடும் தர்ம சங்கடத்தில் இருக்கின்றான். ஒரு போராளி இறந்து விட்டால் குடம் குடமாய்க் கண்ணீர் வடிக்கும் நாம் ஒரு ''பயின்'' இரத்தம் அவனைக் காப்பாற்றுவதற்கு வடிக்க முன்வருவதில்லை. சீதனம் சுரண்ட வருபவனுக்கு பூதானம். சொர்ணதானமென்று கொடுக்கிறோமே. ஆனால் எம்மைக்காப்பாற்றப் போராடுபவர்களுக்கு இரத்ததானம் செய்யும் மனோதர்மம் எமக்கில்லை.

> 1987 மாசி ம... ''சிரித்திரன்'' இதழில் வெளிவந்த ஆசிரியர் தலையங்கம் இது.

போர்க்களத்தில் எமது வீரர்கள் செய்யும் சாஹசங்களையும் சாதனைகளையும் உலகம் அறிந்து வியந்து நிற்கிறது. இந்த வரலாறு படைக்கும் வீரருக்கு நாம் இரத்ததானம் செய்கிறோம் என்று பெருமைப்படுவதில்லை.

இந்தியாவைத் தனது கண்ணென நேசித்த இந்திரா அம்மையார் தனது கண்களை இந்தியாவின் கண் வங்கிக்குத் தானம் செய்யுமாறு தனது மரணசாசனத்தில் எழுதியிருந்தார். சீக்கிய மதத்தவர் இரத்ததானத்தை எல்லாத் தானத்திலும் மேலான தானமெனக் கருதுபவர்கள். சிங்கள மக்கள் மத்தியில் போயாதினத்தன்று இரத்ததானம் செய்வது ஒரு மத தர்மமாக இன்று வளர்ந்து கொண்டிருக்கிறது.

இன்றைய போரில் பொது மக்களையே அரசபடை கட்டுச் சாய்க்கின்றது. இரத்தமிழந்து உயிரிழக்கும் மக்களை பொது மக்களே காப்பாற்ற முன்வரவேண்டும். இரத்தம் மகாவலியெனப் பாயும் எமது மண்ணில் இரத்தவங்கி வற்றாநவக்கீரிக் கிணறுபோல்நிறைந்திருக்க வேண்டும்.

கொடைக்குக் கர்ணனென்று பேசிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. நாடு பலவகைத் தட்டுப்பாட்டில் தகிக்கும் போது கொடை நல்க முன்வரவேண்டும். எமது மண்ணில் எமது இனத்தின் இரத்தம் ஆறாய்ப் பாய்கிறது: இரத்த வங்கியும் வற்றாத ஜீவநதியாக நிரம்பி வழிய வேண்டும். எமது இனத்தில் இரத்த பாசத்தைக் காட்ட இதுவே அரிய சந்தர்ப்பம். இரத்ததானம் செய்யத் தவறினால் எமது இனத்தின் தலை எழுத்தே வேறாக மாறிவிடும்.

கோயில்களில் மிருக வேள்வி வெள்ளமும் ஜீவகாருண்ய புத்தமதம் தோன்றுவதற்கு ஒரு காரணம். இன்று தமிழன் இரத்தம் பாய்கிறது. உலகின் ஒரு பகுதியிலும் ஜீவகாருண்யம் பிறக்க வில்லை. எமது இனத்தைக் காக்க நாமேஉயிர் தானம் செய்ய வேண்டும். இரத்ததானமும் செய்ய வேண்டும். □

---

# முதியோர் இல்லத்திற்கு செஞ்சிலுவை அடையாளம்

(விசேட நிருபர்)

செஞ்சிலுவை அடையாளம் இறுதியாக முதியவர் இல்லத்திற்கும் போடப்படும் நிலைமை உருவாகி இருக்கிறது.

கொழும்புத்துறை, புனித சூசையப்பர் முதியோர் இல்லத்திற்கு சமீபத்தில் ஹெலி, றொக்கட் தாக்குதல் நடத்தியதுதெரிந்ததே.

இதனை அடுத்து மேற்படி முதியோர் இல்லக் கூரைகளிலும் செஞ்சிலுவை அடையாளங்கள் பொறிக்கப் பட்டிருக்கின்றன. (21)

---

## சம்பள முற்பணம்

(கொழும்புத்துறை)

வவுனியா யாழ் மாவட்டங்களில் கடமை புரியும் மதுவரித்திணைக்கள உதவி ஆணையாளர் அலுவலகங்களைச் சேர்ந்த சகல ஊழியர்களுக்கும், யாழ். மாவட்ட மதுவரித்திணைக்கள உதவி ஆணையாளர் திரு. மகேந்திரன் எடுத்த முயற்சியால் சம்பள முற்பணமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. (24)

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

### பலாலியில் விரட்டி விட்டார்களாம்

(கொழும்பு)

பலாலி விமான நிலையப் பகுதியிலிருந்த தமிழீழ விடுதலைப்புலிகளை முற்றாக விரட்டி யடித்துவிட்டதாக இலங்கை அரசு தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# அஞ்சலோட்ட முறையில் இனி யாழ். மாவட்டத்தில் அஞ்சல் சேவை!

## தபால் உத்தியோகத்தர்கள் மூன்று வாரமாக வேலைக்கு வரவில்லையாம்

(யாழ்ப்பாணம்)

அஞ்சல் ஓட்ட முறையில் இனிமேல் யாழ் மாவட்ட தபால் சேவை நடைபெறும் என வட மாகாண தபால் அத்தியட்சகர் எஸ். எம். சேதுகாவலர் அறிவித்துள்ளார்.

யாழ்மாவட்டத்தின் உட்பகுதியில் தபால் சேவைகள் குறிப்பிடப்பட்ட ஒரு தூர இடத்திலிருந்து சேகரிக்கப்பட்டு அவை அண்மிய ஒரு தபால் அகத்திற்கு மாற்றப்பட்டு பின் அங்கிருந்து ஒன்று சேர்த்து இன்னுமொன்றுக்கு அஞ்சல் ஓடிகள் மூலம் மாற்றப்பட்டு பிரதம தபால் அலுவலகத்தை அடைந்து பின் மீண்டும் அஞ்சலோட்ட முறையில் உரிய இடங்களுக்கு சென்றடையும் வகையில் தபால் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக திரு சேதுகாவலர் தெரிவித்தார்.

வெளி மாவட்டங்களை பற்றி அவர் தெரிவிக்கும் பொழுது கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கிளிநொச்சியில் மக்கள் இடம் பெயர்ந்து சென்று விட்டதாலும் கிளிநொச்சி தபால் அலுவலகம் சேதமடைந்து போயிருப்பதாலும் அங்கு தபால் சேவை நடத்த முடியாத சூழ்நிலையுள்ளது.

வவுனியாவை பொறுத்த வரையில் அங்கு அனைத்து அரச அலுவலகங்களும் மூடப்பட்டுள்ளது. தபாலக ஊழியர்கள் எவரும் அங்கு தற்போது இல்லை எல்லோரும் குடாநாட்டிற்குள்ளோ அன்றி வேறு பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுவிட்டதனாலும் தபால் சேவை ஸ்தம்பித்துள்ளது. மன்னார் மாவட்டத்தில் தபால் அலுவலகம் தீயிடப்பட்டு எரிக்கப்பட்டுள்ளது. மக்கள் அகதிகளாக வெளியேறிவிட்டனர். முல்லைத்தீவு மாவட்டத்திலும் திருமலை அகதிகள் வந்து சேர்ந்திருப்பதனாலும் முல்லைத்தீவு மக்கள் வேறு இடங்களுக்கு சென்றுவிட்டதாலும் அங்கு தபால் சேவை நடைபெற முடியாத சூழ்நிலை இருப்பதாகவும் திரு. சேதுகாவலர் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் யாழ் மாவட்டத்தில் தபால் சேவையை ஆரம்பிப்பதற்கு யாழ்ப்பாண பிரதம தபால் அத்தியட்சகர் உட்பட அவரது ஊழியர்கள் மூன்று வாரங்களாக அலுவலகப் பக்கமே வரவில்லை எனவும் தெரிவித்தார் இவர்கள் அனைவரும் உடன் வேலைக்கு வருமாறும் அவர் வேண்டிக்கொண்டுள்ளார். (லோ)

## இலங்கை தமிழ் அகதிகள் விவகாரங்களுக்கு தனி அதிகாரி

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிகளின் மறுவாழ்வு நடவடிக்கைகளைக் கவனிக்கவும், கண்காணிக்கவும் உயர் அதிகாரி ஒருவரை தமிழ்நாடு அரசு நியமித்திருக்கிறது.

இவ் அதிகாரி மூலமாகவே சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் தமிழ் நாடு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை 21,000 தமிழ் அகதிகள் இதுவரை தமிழ் நாட்டிற்கு வந்துள்ளார்கள் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்களின் மறுவாழ்விற்கான நடவடிக்கைகளில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ள அதேவேளை சுகாதார மற்றும்

இதற்கிடையில் இலங்கைத் தமிழ் அகதிகளின் வருகையை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சி கேட்டுள்ளது.

தந்தி ஒன்றின் மூலம் இவ் வேண்டுகோளை விடுத்த பாரதீயஜனதாக் கட்சி இலங்கையில் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை தமிழக மக்கள் கவலையுடன் அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள்என்றும் குறிப்பிட்டுள்ளது.

---

**தமிழர்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிப்பு நடவடிக்கை குறித்த குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்

### கிளிநொச்சி மாவட்ட

## கல்வித்திணைக்களஊழியர் வேலைக்குவர கோரிக்கை

(கிளிநொச்சி)

பரந்தன் இரசாயன தொழிற்சாலை வளாகத்தில் தற்போது இயங்கிவரும் கிளிநொச்சி மாவட்டக்கல்வித்திணைக்களத்தில், இத் திணைக்களத்தைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள், அலுவலர்கள் அனைவரையும் எதிர் வரும் 16ஆம் திகதி கடமைபுரியக் கந்தோருக்கு வரும்படி கிளிநொச்சி மாவட்டக் கல்வி அதிகாரி க. கந்தசாமி பணித்துள் ளார்.

எதிர்வரும் ஜூலை 17ஆம் திகதி இக் கந்தோரில் காலை 9மணியளவில் கல்வி அதிகாரிகள், பதவி நிலை அலுவலர்கள்கொத்தணி அதிபர்கள் கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது. அனைவரும் தவறாது சமுகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

ஜூலை 18ஆம் திகதிக்கு முன்னதாக அனைத்துப் பாடசாலை அதிபர்களும், தமது பாடசாலைச் சம்பளக் கொடுப்பனவுபட்டியலுடன்கடந்த ஜூலை 1ஆம் திகதிக்கும்பின்னர் பாடசாலைக்கு வருகை தந்த ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியலையும் கொத்தணி அதிபர்களுக்கூடாக திணைக்களத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

**18 போராளிகள்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டினன் - நிலான் (வட்டக்கச்சி) இரண்டாம் லெப்டினன் ஜெயா (வவுனியா), கோபி

**தமிழ் மக்கள் . . .**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்றுக் காலை நடந்த பத்திரிகையாளர்

# திருமலையிலிருந்து தப்பி முல்லைத்தீவில் அவதி

ஸ்ரீலங்கா இராணுவத்தினதும் சிங்களக் காடையர்களினதும் குரூரமான தாக்குதலுக்கு அஞ்சி திருமலையிலிருந்து வீடு வாசல்களையும் உடமைகளையும் இழந்து முல்லைத்தீவில் அகதிளாகி நிற்கும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் முல்லைத்தீவில்படும் அவஸ்தைகளை பார்க்கசகிக்க முடியாதிருக்கிறது. என்று அங்கிருந்து திரும்பிய முல்லைத்தீவு செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் விவரித்துள்ளனர்.

முல்லைத்தீவில் தாம் விஜயம் செய்த இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாத்திரம் 42 முகாம்களில் திருமலை அகதிகள் தங்கி இருக்கின்றனராம் 50 குடும்பங்கள் இருக்கக்கூடிய முகாம் ஒன்றில் 200 குடும்பங்கள் தங்கி உள்ளதால் ஆடு மாடுகளிலும் கேவலமான முறையில் சுகாதார வசதிகள் எதுவுமின்றி இவர்கள் அவதிப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்

அனேகமான குடும்பத்தினர் தங்கள் குடும்பத்தில் ஒருவரையாவது இழந்துள்ளார்கள். உறவினரைஇழந்து, உடைமைகளை இழந்து, வீடு வாசல்களை இழந்து வழியில் சொல்லொணா கஷ்டங்களை அனுபவித்தும் இன்னமும் வயிறார உண்பதற்கோ, படுத்து உறங்குவதற்கோ வசதியின்றி கண்ணீரும் கம்பலையுமாக இவ் அகதிகள் காட்சி அளிக்கிறார்கள்.

அகதி முகாம்களில் அனைவரும் படுப்பதற்கான வசதிகள் இல்லாததால் இளம் பெண்களும் குழந்தைகளும் மாத்திரமே உள்ளே தங்குகிறார்கள் வயோதிப பெண்களும் ஆண்களும் திறந்தவெளிகளில் படுத்து நித்திரை செய்கிறார்கள். மலசல வசதிகள் போதாமையினால் வயிற்றோட்ட நோய், சொறி சிரங்கு வேகமாக பரவிவருகிறது.

இவர்களை அவதானிக்க யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்பட்ட தொண்டர் வைத்தியர்களிடம் தேவையான மருந்துக்கள் இல்லாதது ஒரு புறம் அவர்களின் அனேகர் மருத்துவபீட மாணவர்களாக இருப்பதால் நோயை கண்டு பிடிப்பதிலும் உரிய மருந்தை கொடுப்பதிலும் அவர்கள் பரிட்சயமற்றவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

வயிற்றோட்ட நோய் கண் நோய் மலேரியா, சொறி சிரங்கு சாதாரண காய்ச்சல் போன்ற நோய்களுக்குரிய மருந்தே இவர்களிடம் இல்லையாம்.

கர்ப்பிணிப் பெண்கள் பீதி காரணமாகவும் போதிய மருந்துவ சிகிச்சை இல்லாததாலும் குறைமாதத்திலேயே குழந்தைகளைப் பிரசவிக்கும் சம்பவங்களும் இடம் பெறுகின்றன.

கடமையில் உள்ள சில பயிற்றப்பட்ட வைத்தியர்கள் கூட அகதிகள் தொகைக்கும் நோயாளர் தொகைக்கும் ஏற்பசேவைக்கு அனுப்பப்படாததால் சில இடங்களில் தேவைக்கு கூடுதலான வைத்தியர்களும் சில இடங்களில் வைத்தியர் பற்றாக்குறையும் நிலவுவதாகவும் தெரிய வருகிறது. (75)

## கூட்டுறவுச் சங்கத்தில் இராணுவத்தினர் கொள்ளை

(செட்டிகுளம்)

செட்டிகுளம் இராணுவ முகாமில் இருந்து வெளியே வந்தஇராணுவத்தினர் நேற்று காலை பத்துமணியளவில் செட்டிகுளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினை உடைத்து கொள்ளையில் ஈடுபட்டனர்.

அப்போது இராணுவத்தினர்மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எதிர்த் தாக்குதலையடுத்து இராணுவத்தினர் முகாம் திரும்பினர்.

## வைத்தியசாலைக்கு மக்கள் மருந்து, உணவு உதவி

(மானிப்பாய்)

மானிப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த சில கிராம மக்கள் உணவுவகைகளையும் மருந்து வகைகளையும் அன்பளிப்பாக வழங்கி உள்ளனர்.

சித்திரமொழி, இளவாலை, சென்ஜேம்ஸ், சிறுவிளான், முள்ளானை போன்ற பிரதேசங்களை சேர்ந்த மக்கள் கடந்தகால யுத்தநடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட யாழ் வைத்தியசாலைக்குப் பதிலாக இயங்கும் மானிப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கு சேலையின் போத்தல்கள், சமைக்கப்பட்ட உணவு, பழவகைகள், பால்மா வகைகள் கோழிக்குஞ்சு, இளநீர் போன்றவற்றை அந்த வைத்தியசாலை நோயாளர்களைப் பார்வையிட்டு, இக்கிராம மக்களின் பிரதிநிதிகள் வழங்கினர். (லோ)

### தவறு

(தெல்லிப்பளை)

''விமானத்திலிருந்து சூடு, மூவர் மரணம்'' என்று நேற்று வெளியான செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்த லொறி, தெல்லிப்பளை பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்தின் லொறி அல்ல என்று இச்சங்கத்தின் செயலாளர் சி. சிவமகாராசா தெரிவிக்கிறார். (ஆ-ர்)

---

**இராணுவத்தால்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 22), கதிர்காம சுப்பிரமணியம் (வயது 40), ஜெயகாந்தன் ஆகிய மூவர் இராணுவத்தாரால் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

**இடமாற்றம்**

**BATA ஏஜென்சி**

யாழ் ரேட் சென்ரர்,
11, நவீன சந்தை ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

# இலங்கைத் தமிழ் அகதிகள் விவகாரங்களுக்கு தனி அதிகாரி

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிகளின் மறுவாழ்வு நடவடிக்கைகளைக் கவனிக்கவும், கண்காணிக்கவும் உயர் அதிகாரி ஒருவரை தமிழ்நாடு அரசு நியமித்திருக்கிறது.

இவ் அதிகாரி மூலமாகவே சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் தமிழ் நாடு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை 21,000 தமிழ் அகதிகள் இதுவரை தமிழ் நாட்டிற்கு வந்துள்ளார்கள் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்களின் மறுவாழ்விற்கான நடவடிக்கைகளில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ள அதே வேளை சுகாதார மற்றும் சகல வசதிகளையும் செய்து வருகின்றனர்.

இதற்கிடையில் இலங்கைத் தமிழ் அகதிகளின் வருகையை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சி கேட்டுள்ளது.

தந்தி ஒன்றின் மூலம் இவ் வேண்டுகோளை விடுத்த பாரதீயஜனதாக் கட்சி இலங்கையில் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை தமிழக மக்கள் கவலையுடன் அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளது.

## கடனாகவே

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சி. சிவம் தலைமையில்நடைபெற்ற இக்கூட்டத்தில் மகளிர் முன்னணி உறுப்பினர் சமீனா பேசுகையில் இன்று சீதனம் என்பது பெண்களாலேயே உருவாக்கப்படுகின்றது. ஒருதாய் தனது மகளுக்குச்சீதனம் கொடுக்கும்போது மனம் வருந்துகின்றார். அதே நேரம் தன்மகனுக்கு நிறைந்த சீதனம் கேட்கின்றார். இந்த நிலையில் மண்மீட்பு நிதிக்கு பவுண் கடனாகக் கொடுக்க ஏன் தயங்க வேண்டும். தாமே பங்காளராகச்சேர முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் இராஜன் பேசுகையில், இலங்கை சிங்களஅரசையும், இந்தியஏகாதிபத்திய இராணுவத்தையும் எதிர்த்துப் போராடும் போது நீங்கள் தந்தஆதரவைநாங்கள் மறக்கவில்லை. இதுவரை அரச வங்கி நிறுவனங்களில் நகை அடைவு வைத்து ஏமாந்தீர்கள். இன்று நாம் மண் மீட்பு நிதிக்காகவே உங்களிடம் பவுண் கடனாகக் கேட்கின்றோம். நீங்கள் தமிழீழ மத்திய வங்கியில் பாதுகாப்பிற்காக வைப்பதாகக் கருதி வழங்குங்கள் என்றார்.

## தமிழர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீட்பு நடவடிக்கை குறித்த குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் இராணுவத்தினராலும், விமானக் குண்டுவீச்சினாலும் கொல்லப்படுவது குறித்தும்; ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக்கப்படுவது குறித்தும் பலத்த கண்டனத் தீர்மானம் ஒன்றும் கொண்டு வரப்பட்டது.

தமிழ் மக்கள் பற்றிய விடயத்தில சர்வதேச குழுவின் சமரச முயற்சியை சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் முயற்சியானது, இந்தப் பிரச்சினையிலிருந்து இந்தியாவை ஒதுக்கி வைக்கும் கபடத்தனமே என்றும் அந்தக் கண்டனத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் அகதிகளாக தமிழகம் வருவது சிறிலங்காவில் அவர்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் பாதுகாப்பில்லை என்பதையே உறுதிப்படுத்துகின்றது'' என்றும் மேற்படி கண்டனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 20ஆம் தேதி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டைப்பும், பொதுவேலை நிறுத்தமும் மாலை ஆறுமணி வரை நீடிக்கப்படும் என்றும் செய்தியாளர்கள் மத்தியில் தமிழக முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

## அறிவித்தல்

நல்லூர் பிரதேச எல்லைக்குட்பட்ட சகல வாகன (மோட்டார் சைக்கிள் உட்பட) சொந்தக்காரர்களும் சாரதிகளும் இன்று வெள்ளிக் கிழமை ( 13 - 07 - 90 ) மாலை 5 . 00 மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நல்லூர்ப் பிரதேசப் பொறுப்பாளர் பிரதேச அலுவலகத்திற்கு தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 -ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் தேதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது

(கிளிநொச்சி)

பரந்தன் இரசாயன தொழிற்சாலை வளாகத்தில் தற்போது இயங்கிவரும் கிளிநொச்சி மாவட்டக்கல்வித்திணைக்களத்தில், இத் திணைக்களத்தைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள், அலுவலர்கள் அனைவரையும் எதிர் வரும் 16ஆம் திகதி கடமைபுரியக் கந்தோருக்கு வரும்படி கிளிநொச்சி மாவட்டக் கல்வி அதிகாரி க. கந்தசாமி பணித்துள் ளார்.

எதிர்வரும் ஜுலை 17ஆம் திகதி இக் கந்தோரில் காலை 9மணியளவில் கல்வி அதிகாரிகள், பதவி நிலை அலுவலர்கள்கொத்தணி அதிபர்கள் கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது. அனைவரும் தவறாது சமுகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

ஜுலை 18ஆம் திகதிக்கு முன்னதாக அனைத்துப் பாடசாலை அதிபர்களும், தமது பாடசாலைச் சம்பளக் கொடுப்பனவுபட்டியலுடன்கடந்த ஜுலை 1ஆம் திகதிக்கும்பின்னர் பாடசாலைக்கு வருகை தந்த ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியலையும் கொத்தணி அதிபர்களுக்கூடாக திணைக்களத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## 18 போராளிகள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டினன் - நிலான் (வட்டக்கச்சி) இரண்டாம் லெப்டினன் ஜெயா (வவுனியா), கோபி அம்பாறை), நவம் (திருக் கோணமலை), நிர்மன் (உமையாள்புரம்), விநோத் (தென்னமரவடி), மருது (புதுக்குடியிருப்பு) ஆகியோருமே வீரமரணமடைந்தவர்கள் இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## தள்ளாடியில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தினர் கொல்லப்பட்டனர். விடுதலைப்புலிகள் இயக்கத்தைச்சேர்ந்தபோராளிகளான மில்லர், வேதமணி, மயூரன், பாரதி ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைச் செலுத்துகின்றனர். இராணுவத்தினரின் இழப்பு பற்றிய எண்ணிக்கை தெரியவில்லை. (4)

## கொக்காவில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் பல இராணுவத்தினரின் சடலங்கள் சிக்கிக்கிடக்கலாமெனக் கருதப்படுகிறது. மீட்புவேலைகளை விடுதலைப் புலிகள் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

சிறிலங்கா விமானப்படை விமானங்களும்ஹெலிக்கொப்ரர்களும் வானத்திலிருந்து கடும் தாக்குதல் நடத்திய அதே சமயம் இராணுவச்சிப்பாய்களும் கீழே இருந்து கடுமையாக மோதினர்.

இவற்றை எதிர்த்து விடுதலைப் புலிகள் வீரப்போர் புரிந்து கொக்காவில் முகாமை முறியடித்தனர். இந்த முகாமுடனிருந்த ரூபவாகினி ஒளிபரப்பு அஞ்சல் கோபுரம் இத் தாக்குதலின்போது சேதம் அடைந்தது.

கொக்காவில் இராணுவ முகாமும் ஒளிபரப்பு அஞ்சல் கோபுரமும் நாசமாக்கப்பட்டதுஎன்பதைசிறிலங்கா பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்றுக்காலை பத்திரிகையாளர் மாநாட்டில் ஒப்புக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்கள் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்றுக் காலை நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இப்பொழுது நடைபெறும் யுத்தம் விடுதலைப்புலிகளுக்கு எதிரான தென்றும் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல வென்றும் மீண்டும் ரஞ்சன் சொன்னார்.

அதேவேளை கல்முனையில் கொல்லப்பட்ட தமிழர்கள் முஸ்லிம் ஆயுதக் குழுவான ஜிகாத்தாலும்,விடுதலைபுலிகளுக்கு எதிரான போட்டிக்குழுக்ளாலும் கொல்லப்பட்டிருக்கலாம்என ரஞ்சன் விஜேரெட்னா தெரிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது.

ஆனால் கல்முனைக் கொலைகளுக்கு முஸ்லிம் ஆயுதக் குழுவான ஜிகாத்தே காரணம் என ரஞ்சன் தெரிவித்ததாக பி.பி.ஸி.தெரிவித்தது. அதேவேளை ஜிகாத்தினருக்கும், தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என முஸ்லிம் காங்கிரஸ் மறுத்துள்ளது.

## சிறிலங்கா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீச்சுக்களும், கடல் பீரங்கித் தாக்குதல்களும் தமிழ்ப்பேசும் மக்களின் உயிர்களையும், சொத்துக்களையும் அழிப்பதில் அரசாங்கம் எவ்வளவு தூரம் ஆவல் கொண்டுள்ளது என்பதை நிரூபிக்கின்றன.

தமிழ்ப் பிரதேசங்களில் தற்போது நடைபெற்றுவரும் நிகழ்வுகள் எமக்குப் பலத்த அச்சத்தினையும், அதிர்ச்சியினையும் உண்டாக்குவனவாக உள்ளன. எதுவித காரணமுமின்றி மக்கள் கைது செய்யப்படுகிறார்கள். சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். ரயர் போட்டு எரிக்கப்படுகிறார்கள். நாட்டின் பிரதான பகுதிகளிலிருந்து வடக்கிற்கும், கிழக்கிற்குமான செய்தித்தொடர்புகள், போக்குவரத்துக்கள் யாவும் துண்டிக்கப்பட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகள் தமிழ்ப்பேசும் மக்களை அழிப்பதற்காக இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்டுவரும் இன ஒழிப்பு நடவடிக்கைகளாகவே நாம் கருதுகின்றோம். இவ்வின ஒழிப்பு நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

''இந்த இன ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக நடைபெறும் சுயநிர்ணய போராட்டத்திற்கு தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தங்கள் பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு'' என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யும் அன்பளிப்பாக வழங்கி உள்ளனர்.

சித்திரமொழி, இளவாலை,

## தவறு

(தெல்லிப்பளை)

''விமானத்திலிருந்து சூடு, மூவர் மரணம்'' என்று நேற்று வெளியான செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்த லொறி, தெல்லிப்பளை பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்தின் லொறி அல்ல என்று இச்சங்கத்தின் செயலாளர் சி. சிவமகாராசா தெரிவிக்கிறார். (ஆ-ர்)

## இராணுவத்தால்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 22), கதிர்காம சுப்பிரமணியம் (வயது 40), ஜெயகாந்தன் ஆகிய மூவர் இராணுவத்தாரால் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ம)

## இடம்பெயர்ந்த

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வையும் இக்காரணத்தால் நடைபெறாது உள்ளன. தருமபுரம் ம. வி. விமானத் தாக்குதலில் பாதிக்கப்பட்டதால் மூடப்பட்டுள்ளது இப் பாடசாலை ஜுலை 16இல் இருந்து ஆரம்பிக்கப்படும். இவ்வாறு கிளிநொச்சி மாவட்டக் கல்விப்பணிப்பாளர் க. கந்தசாமி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அச்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கிளிநொச்சி நகரிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு, கிட்டத்தட்ட 1500, வட்டக்கச்சி ம. வி, திருவையாறு அ. த. க. பா, அக்கராயன் அ. த. க. பா, முரசுமோட்டை முருகானந்த வித்; கண்டாவளை அ. த. க. பா, கல்வெட்டித்திடல் நகேஸ்வரா வித். ஆகியவற்றில் தற்காலிகமாக சேர்ந்துகற்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இயங்காதுள்ள பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் வசதிக்கேற்ப இப்பாடசாலைகளுக்கு இடமாற்றப்பட்டுள்ளார்கள்.

க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்குவிசேட வகுப்புக்கள் வட்டக்கச்சிம.வி, கிளிநொச் சி இந்தும.வி. ஆகியவற்றில் நடைபெறுகின்றன.

இம்மாவட்டத்தில் தற்போது கடமையாற்றும், ஆசிரியர்கள், அதிபர்கள் சமுதாய நோக்குடன் கடமை புரிகிறார்கள்.

பட்டுள்ள நோயாளர்களுக்கு சேலையின் போத்தல்கள், சமைக்கப்பட்ட உணவு, பழவகைகள், பால்மா வகைகள் கோழிக்குஞ்சு, இளநீர் போன்றவற்றை அந்த வைத்தியசாலை நோயாளர்களைப் பார்வையிட்டு, இக்கிராம மக்களின் பிரதிநிதிகள் வழங்கினர். (லோ)

கூட அகதிகள் தொகைக்கும் நோயாளர் தொகைக்கும் ஏற்பசேவைக்கு அனுப்பப்படாததால் சில இடங்களில் தேவைக்கு கூடுதலான வைத்தியர்களும் சில இடங்களில் வைத்தியர் பற்றாக்குறையும் நிலவுவதாகவும் தெரிய வருகிறது. (75)


## இடமாற்றம்

**BATA ஏஜென்சி**

யாழ் ரேட் சென்ரர்,
11, நவீன சந்தை ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் வாடிக்கையாளரின் பாதுகாப்பையொட்டி கீழ்க்காணும் விலாசத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்

**யாழ் ரேட் சென்ரர்**
**325, சென்ரல் நேசிங்ஹோம் சந்தி,**
**பலாலி றோட், யாழ்ப்பாணம்.**

R 1514


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சின்னையா நடராஜா**
**(லின்டன்)**

ஜனனம்: 22 - 04 - 1964

வீரமரணம்: 13 - 07 - 1987

விடுதலை வேள்வியில் ஆகுதியானதோர்
வீரனின் பெயர் ஒரு காவியமானது
கொடுமதியுடையவர் ஆட்சி பொடிபட
குமுறிச் சினந்தவன் காற்றில் கலந்தனன்.

வவுனியா - விளாத்திக் குளம் இரணை இலுப்பைக் குளத்தைச் சேர்ந்த இவர் ஸ்ரீலங்கா இராணுவத்துடனான வடமராட்சி லிபறேசன் ஒப்பறேசன் நேரடி மோதலின்போது வீரமரணமடைந்தவராவார்.

- நண்பர்கள்

B 1250